இந்தக் கோரிக்கையை வைத்து, இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதே கேள்வியைத்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். நல்லமுடி பூஞ்சோலையானது தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களின் எல்லையைப் பார்த்து ரசிக்கக்கூடிய இடம் என்பதால் இந்த இடத்தில் telescope தொலைநோக்கி அமைத்தல் மற்றும் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்; அதுபோல, குரங்கு அருவிக்கு தற்போது வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்கள் குளித்து உடை மாற்றுவதற்கு தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்துதல் என மாண்புமிகு உறுப்பினர் வைத்துள்ள அத்தனை கோரிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதியாதாரத்தின் அடிப்படையில் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***48918—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை, ஆலத்தூர் நாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய இயலாததால், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை, ஆலத்தூர் நாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மை விட்டுப் பிரிந்தாலும், நம்முடைய மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கி, அம்மா அரசின் அனைத்துத் திட்டங்களையும் நம்முடைய மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்றவகையில், அல்லும்பகலும் அயராது பாடுபட்டு, 24 மணி நேரத்தில் 18 மணி நேரம் உழைத்து, அன்பின் மொத்த உருவமாய், உழைப்பின் சிகரமாய் உழைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, அவருக்கு உறுதுணையாக நின்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கு இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்தாலோசித்து, தினந்தோறும் ஆய்வு மேற்கொண்டு, சிறப்பான திட்டங்களைத் தீட்டி பாடுபட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள ஆலத்தூர் நாடு பகுதியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு 15 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று வருகின்ற சூழ்நிலைதான் இருக்கின்றது. கொல்லிமலை பகுதி 1,800 மீட்டர் உயரத்தில் உள்ளது. அதனால், உயர்நிலைப் பள்ளி அமைந்திருக்கின்ற பகுதிக்குச் செல்லவேண்டுமென்றால் மலை ஏறி, அங்கிருந்து கிட்டத்தட்ட 1,000 மீட்டருக்குக் கீழே வரவேண்டியிருக்கிறது. எனவே, மலை உயரத்தைக் கடந்து, கீழே வந்து நட்டுக்குழிப்பட்டியில்தான் கல்வி பயின்று வருகிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அண்ணன் அவர்கள் இன்றைக்கு கல்விக்காகப் பல்வேறு திட்டங்களைத்

திட்டிச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, அது மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த ஆலத்தூர் நாடு பகுதியிலுள்ள நடுநிலைப் பள்ளியை இந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, அதைச் செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதை வலியுறுத்தி என்னிடத்தில் இப்போது சொன்னார்கள். ஆகவே, இந்தப் பணிகளைப் பொறுத்தவரையிலும் இடம் மட்டும்தான் நமக்குத் தேவைப்படுகிறது. 69 சென்ட் இடம்தான் இருக்கிறது. மூன்று ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஆகவே, உடனடியாக நீங்கள் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், மலைப் பகுதி என்ற முறையில் வருகின்ற ஆண்டில் அந்தப் பள்ளியைத் தரமுயர்த்தித் தருவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அந்தப் பணிகளை நிறைவேற்றித் தருவோம். மலைப் பகுதியின் உச்சியில் இருந்து கீழே வந்து, மீண்டும் அந்த மாணவர்கள் செல்வது என்பது கடினமான வேலை. பத்து கிலோ மீட்டர் தொலைவிலே பள்ளிகள் இல்லை என்றும் உறுப்பினர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொன்னார்கள். ஆகவே, மலைப் பகுதியில் இருக்கிற மக்களின் நலன் கருதி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய

கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மலையில் அமைந்திருக்கின்ற சேலூர்நாடு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இந்த ஆண்டே கட்டடம் கட்டித் தரவும், அதேபோல, சேந்தமங்கலம் வட்டம், பேளுக்குறிச்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் போதிய வகுப்பறைகள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரவும், அதேபோல, மலைப் பகுதியில் இருக்கின்ற அரியூர் புதுவளவு, தெம்பலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வகக் கட்டடம் கட்டித் தரவும் ஆவன செய்ய வேண்டும். மேலும், மலைப் பகுதியில் பேருந்து போக்குவரத்து இல்லாத சூளவந்தி மற்றும் பெரும்பரப்புப்பட்டி பகுதிகளில் ஆசிரியர்கள் தங்கி கல்வி சொல்லிக் கொடுக்க வசதியாக அங்குள்ள பள்ளிகளுக்கு அருகில் அவர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று கேள்விகளை இங்கே வைத்திருக்கிறார்கள். ஒன்று, ஆய்வகம் கட்டித் தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கை; இரண்டாவதாக, இரண்டு பள்ளிக்கூடங்களுக்குக் கூடுதல் வகுப்பறைகள் வேண்டுமென்று சொன்னார்கள்; NABARD திட்டத்தின்கீழ் செய்வதற்கு இந்த ஆண்டில் அவை இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கூடுதல் கட்டடங்களை மிக விரைவில் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். ஆய்வுக்கூடங்களைப் பொறுத்தவரையில், உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்திற்கு பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து, Atal Tinkering Laboratory 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பள்ளியில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, தங்கும் விடுதிகள் வேண்டுமென்று கேட்டார்கள். தங்கும் விடுதிகள் வேண்டுமென்று சொன்னால், பிற்படுத்தப்பட்ட மாணவர்களாக இருந்தால் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்

2019 ஜூலை 16]

மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களும், ஆதி திராவிட மாணவர்களாக இருந்தால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களும்தான், அங்கு விடுதிகள் கட்டுவதற்கான பரிந்துரையைச் செய்ய வேண்டும்; கட்டித் தர வேண்டும். ஆகவே, உரிய அமைச்சரிடத்தில் உறுப்பினர் தனது கேள்வியை வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செவாத்தூர் புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்காக கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, மூன்று ஆண்டுகளாகின்றன. அதற்கு மக்களின் பங்களிப்புத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சத்தினை அந்தப் பகுதி மக்கள் செலுத்தியிருக்கிறார்கள். கடந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தபோது, இந்த ஆண்டு பட்டியலிலே, இந்தப் பள்ளியைச் சேர்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி, ஏறத்தாழ ஓராண்டு ஆகிறது. ஆகையால், அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, செவாத்தூர் புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக இந்த ஆண்டு தரமுயர்த்த ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியிலுள்ள செவாத்தூர் புதூர் என்ற ஒரு கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று சென்ற ஆண்டு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு 150 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 100 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. கடந்த ஆண்டு அந்தப் பள்ளியைச் சேர்க்க இயலவில்லை. இந்த ஆண்டு, அரசு அந்தப் பள்ளிக்கு முன்னுரிமை கொடுத்து, உறுப்பினர் கோரிய அந்தப் பணிகளை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

***36154—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, காரணைபுதுச்சேரி ஊராட்சியில் உள்ள முழுநேர நியாய விலைக் கடையை (03DP048PY) *இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் காரணைபுதுச்சேரி முழுநேர நியாய விலைக் கடை 1,629 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காரணைபுதுச்சேரி முழுநேர நியாய விலைக் கடையைப் பிரித்து, மற்றொரு முழுநேர நியாய விலைக் கடையைத் தொடங்குவது குறித்து கேட்டிருக்கிறார். துறை ரீதியாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுகுறித்து ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.